செ.வெ.எண் 747 நாள் 23-10-09

# பத்திரிக்கை செய்தி

மாண்புமிகு தொழிலாளர் நல அமைச்சர் திரு. தா.மோ. அன்பரசன் அவர்கள் தலைமையில் சென்னை மண்டல தொழிலாளர் துறை மற்றும் தொழிற்சாலைகள் ஆய்வுத் துறை அலுவலர்களின் திறனாய்வுக் கூட்டம் சென்னை, தமிழ்நாடு தொழிலாளர் நல வாரியக் கருத்தரங்குக் கூடத்தில் 23.10.2009 அன்று நடைபெற்றது. இக்கூட்டத்தில் தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை அரசுச் செயலர், டாக்டர் ட்டி. பிரபாகராவ், இ.ஆ.ப., தொழிலாளர் ஆணையர் திரு.அ. சுகுமாரன் இ.ஆ.ப., தொழிலாளர் கூடுதல் ஆணையர் திரு. ப்பி. கருப்பசாமி தலைமை தொழிற்சாலைகள் ஆய்வர் திரு செ. இரகுநாதன், தொழிலாளர் துறை மற்றும் தொழிற்சாலைகள் ஆய்வுத் துறை அலுவர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

இக்கூட்டத்தில் மாண்புமிகு தொழிலாளர் நல அமைச்சர் அவர்களால் சென்னை, வேலூர், திருவண்ணாமலை, காஞ்சிபுரம், திருவள்ளூர், கடலூர் மற்றும் விழுப்புரம் மாவட்டங்களில் அமைப்புசாரா நல வாரியங்களின் செயல்பாடுகள் குறித்து மாவட்ட வாரியாக விரிவாக திறனாய்வு மேற்கொள்ளப்பட்டது. இவ்வலுவலகங்களில் தொழிலாளர்களை புதிய பதிவுகளை முழுவதும் கணினிமயப்படுத்தப்பட்டு வருவது குறித்தும், உதவித் தொகை கோரி தொழிலாளர்கள் அளித்த மனுக்கள் மீது விரைவில் நடவடிக்கை எடுத்து, நலத்திட்ட உதவித் தொகை தாமதமின்றி பயனாளிகளுக்கு வழங்க வேண்டுமென சம்மந்தப்பட்ட அலுவலர்களுக்கு அமைச்சர் அவர்களால் அறிவுரைகள் வழங்கப்பட்டன. மேலும், இக்கூட்டத்தில் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பேசுகையில், மாண்புமிகு தமிழக முதல்வர் தலைவர் டாக்டர் கலைஞர் அவர்கள் அறிவுறுத்தியுள்ளபடி, ஒவ்வொரு மாவட்டத்திலும் அமைப்பு சாரா தொழிலாளர்கள் அதிகம் உள்ள பகுதிகளில், மாதந்தோறும் இரண்டாவது வெள்ளிக் கிழமைகளில் ஒரு சிறப்பு முகாம் நடத்திட ஏற்பாடு செய்திட வேண்டும். இம்முகாம்களில், அதிக அளவில் வாரியங்களில் உறுப்பினர்களை பதிவு செய்வதோடு, நலத் திட்ட உதவிகள் பயனாளிகளுக்கு தாமதமின்றி கிடைத்திட உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளுமாறும் அறிவுறுத்தினார்.

தொழிலாளர் துறை அலுவலர்கள் தங்கள் ஆட்சி எல்லைக்குட்பட்ட தொழில் நிறுவனங்களில் ஏற்படுகின்ற தொழிலாளர் பிரச்சினைகளை சட்ட வரையறைக்கு உட்பட்டு, உரிய முறையில் தீர்வு காணவும், பிரச்னைகளை உடனுக்குடன் தீர்த்து வைத்திட தீவிர முயற்சிகள் மேற்கொள்ள வேண்டுமெனவும், தமிழகத்தில் தொழில் அமைதியினைப் பேண அனைத்து அலுவலர்களும் தனி கவனம் செலுத்தி செயல்பட வேண்டுமென மாண்புமிகு தொழிலாளர் அமைச்சர் அவர்களால் ஆலோசனைகள் வழங்கப்பட்டன.

மேலும், இக்கூட்டத்தில் தொழிற்சாலைகளில் பணிபுரியும் தொழிலாளர்களுக்கு தொழிலாளர் நலச் சட்டங்களின் கீழ் அனைத்து பயன்களும் பெற்றிடும் வகையில், சட்டங்களை உரிய முறையில் அமல்படுத்திட வேண்டும். மேலும், கடந்த கூட்டத்தில் வழங்கப்பட்ட அறிவுறைகளின்படி, அனைத்து தொழிலாளர்களுக்கும் அடையாள அட்டைகள் தொழில் நிறுவனங்கள் மூலம் அடையாள அட்டைகள் வழங்கி வருவதை உறுதி செய்திட வேண்டுமெனவும் தலைமை தொழிற்சாலைகள் ஆய்வர் மற்றும் தொழிற்சாலைகள் அலுவலர்களுக்கு மாண்புமிகு அமைச்சர் அவர்களால் அறிவுரைகள் வழங்கினார்.

வெளியீடு, இயக்குநர்,
செய்தி, மக்கள் தொடர்புத் துறை,
தலைமைச் செயலகம், சென்னை-9